மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : படுகைப் பாலம் கட்டும் பணி 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடிவடைந்தது.

சுப்பிரமணியபுரம் அருகே மேம்பாலம்

*649 வினு.— திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுரை சுப்பிரமணியபுரம் அருகில் கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலத்தின் மொத்த மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்த மதிப்பீடு ரூ. 36 லட்சம்.

Bridge across Gadilam river

*650 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that a bridge across river Gadilam near Ulundurpet has been opened recently; and

(*b*) if so, the expenditure incurred therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ரூ. 5,201-84.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கடிலம் பாலத்தை திறக்க ஏற்கெனவே ஒரு முறை தேதி முடிவு செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டதா ? ஆம் எனில் அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முதல்வர் அவர்களுக்கு உடல் நலம் இல்லாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டது.

டீசல் விசையேற்றங்கள் வாங்கக் கடன்கள்

*651 வினு.— திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மத்திய அரசு நிதி உதவியுடன் விவசாயிகளுக்காக டீசல் என்ஜின் வழங்கும் திட்டம் அமுலில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் கீழ் 1974-75 நிதியாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது ?

(உ) எந்த அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்பட்டது ?